பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a Newspaper in Sri Lanka.

02 MAR 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா**
**ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1539)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 18 வெள்ளிக்கிழமை (2-03-2001) தொலைபேசி: 3378 ஒலி: 72

★ இரட்டை வேடம் கலைந்தது!

# விடுதலைப்புலிகளின் தடையை ஐ.தே.கட்சி வரவேற்றுள்ளது!

## டிரோன் பெர்னாண்டோ அறிக்கை

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இடம்பெறச் செய்து அதனை பிரித்தானிய அரசு தடைசெய்திருப்பது வரவேற்கத்தக்கதொரு நடவடிக்கையென ஐக்கியதேசியக கட்சி தெரிவித்துள்ளது.**

**1992-ம் ஆண்டில் விடுதலைப் புலிகளை அமெரிக்க அரசாங்கம் தடை செய்ததற்கும் ஐக்கிய தேசியக் கட்சியே காரணமாக இருந்தது**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்புமாவட்ட எம்பி. டிரோன் பெர்னாண்டோ விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்திருப்பதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

**ஐ.தே. கட்சியின் மௌனம் கலைந்த இரட்டைவேடம்**

தமிழீழ விடுதலப் புலிகள் அமைப்பை பிரிட்டிஷ் அரசு தடை செய்ய வேண்டுமென சிங்களபௌத்த பேரினவாதிகள் கோரிய போது மௌனமாக இருந்த ஐக்கியதேசியக் கட்சி தனதுஇரட்டை வேடத்தைக் கலைத்துவிட்டு புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டிருப்பதை மனதார வரவேற்று நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

தமிழீழ விடுதலப் புலிகளை பிரித்தானிய அரசு தடை செய்திருப்பதைக் கருத்தில் கொண்ள்ளதுசமாதானத்திற்கான பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சமாதானப் பேச்சுவார்த்தையே உகந்ததென்று நீண்டகால

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீதான பிரிட்டனின் தடை சமாதானம் ஏற்படுவதை தடுக்காது!

### பிரிட்டிஷ் தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சு வார்த்தையை சாத்தியமான அளவுக்கு விரைவாக ஆரம்பிக்கவேண்டுமென்று பிரிட்டன்வலியுறுத்தி உள்ளது.

இலங்கைக்கான பிரிட்டன் தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு பிரிட்டன் தொடர்ந்தும் ஆதரவுவழங்கும் சர்வதேசபயங்கரவாதத்துக்கு எதிரான பிரிட்டனின் உறுதியான நிலைப்பாட்டையே பயங்கரவாதஅமைப்புக்களின் தடைத் தீர்மானம் வெளிப்படுத்துகிறது.

வெளிநாடுகளால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளுக்கு உதவ

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் தடைக்கு இந்தியா வரவேற்பு

[புதுடில்லி]

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பிரித்தானிய அரசாங்கம் தடை செய்ததை இந்தியா வரவேற்கின்றதென இந்திய அரச தகவல்ஊடகங்கள் நேற்றுத்தெரிவித்துள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ், பிரித்தானிய அரசு விடுதலைப்புலிகள் உட்பட 21 அமைப்புகளை தடை செய்த நடவடிக்கை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகுமென்றும் அதனை இந்தியா ஆதரிக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## புலிகள் பேச்சுக்கு வர பிரிட்டனின் தடை உதவும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசு பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்திருப்பது இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாக அமையமாட்டாது.

இவ்வாறு லண்டனில் உள்ள இலங்கைத்தூதுவர் மங்களமுனசிங்க பி.பி.சி: சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில்தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்தடைப் பிரகடனம் விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கனுப்புவதற்கு உந்துதலாக அமையுமென்றும், சர்வதேச சட்ட விரோத நடவடிக்கையில் புலிகள் ஈடுபடுவதைத் தடுக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ந-4)

## இரண்டு மீனவர்களை புலிகள் இன்று விடுவிப்பர்!

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருக்கும் கைதிகளானஇருமீனவர்களும் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

வவுனியா மாமடு குளத்தில் மீன்பிடிக்கச் சென்றபோது இரு மாதங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட இரு மீனவர்களுமே விடுதலை செய்யப்படவுள்ளனர்

இன்று காலை விடுதலை செய்யப்படவுள்ளசுந்தரபால அஜித்குமாரசிங்க ஆகிய இரு மீனவர்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக வவுனியாவிற்கு அழைத்துச்செல்லப்பட்டு வவுனியா சியம்பலஹஸ்பவவிமலசார தேரரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (ம)

## ஊரடங்கு நேரத்தில் மாற்றம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் வழமைபோல் ஊரடங்குச்சட்டம் இரவு எட்டு மணிமுதல் அதிகாலை ஐந்து மணிவரை அமுலில் இருக்குமெனவும் அதில் மாற்றமில்லை எனவும் படைத்தரப்பினர் மீளவும் வலியுறுத்தியுள்ளனர்.

ஊரடங்கு நேரத்தைப் பொதுமக்கள் கவனத்தில் கொண்டு செயற்படுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றும் நேற்று முன்தினமும் பலாலி வீதி, பிறவுண் வீதி, கே. கே. எஸ் வீதி ஆகிய இடங்களில் ஊரடங்கு நேரத்தில் பயணித்தவர்களின் அடையாள அட்டைகளைப் படையினர் பறிமுதல் செய்தனர். (ம)

## ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள ஈழத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதற்கு ஆட்சேபம்தெரிவித்து இன்று ஜேர்மன் பிறிமன் நகரில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது;

ஈழத் தமிழர்களைகொழும்புக்கு திருப்பி அனுப்பினால் அங்கு அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும்எனவும இந் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு கே ரியுமே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. (இ)

## மட்டு.வாகரைக்கு உணவுப் பொருள்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் உள்ள இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளுக்கு இன்னும் ஓரிரு தினங்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட உள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் ஒஸ்லோவில் நோர்வே புலிகளுக்கு ஆதரவு!

### சிஹல உறுமய சீறுகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளையும் பிரித்தானியா தனதுபயங்கரவாத அமைப்புக்கள் தொடர்பான பட்டியலில் உள்ளடங்கியிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதொரு நடவடிக்கையென்று சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாத அமைப்பான சிஹலஉறுமய விடுதலைப் புலிகளை, பிரித்தானியா பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்ததையிட்டு மகிழ்ச்சிதெரிவித்துள்ளது. இது தொடர்பாக கட்சியின் தலைவர் திலக்கருணாரட்ண கருத்து தெரிவிக்கயில்; விடுதலைப்புலிகளைத் தடைசெய்யக்கூடாதென கடந்தகாலங்களில் ஐக்கியதேசியக் கட்சி பாராளுமன்று உறுப்பினர் தி. மகேஸ்வரன், மற்றும் தமிழர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறு விளம்பரம்


## தேவை

Paper Cutting maehaine வேலை செய்யக் கூடிய binding வேலை தெரிந்தவரும் உடன் தேவை. தொடர்பு:- விளம்பர இல. 108, மே/பா, வலம்புரி. (கி-2581)

## விற்பனைக்கு

டீ. பிறிச் புதியது நீளம் 5½ அடி, அகலம் 2½ அடி உளளே சில்லர் தட்டினால ஆனது விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: லிங்கம் தொலைத் தொடர்பு மானிப்பாய் வீதி, தாவடி. T. P. 2690

(2568)

## தேவை

மருந்தகத்தில் வேலைபழகுவதற்கு பெண் பிள்ளைகள தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி புதிய குறிஞ்சி; பரமேஸ்வராச் சந்தி (பல்கலைக்கழகச் சந்தி).

(2572)


# நன்மை, தீமைப் பலனளிப்பவர்க்கே...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி] யும், காலவதேவனின் துணை கொண்டும் அனைத்து ஜீவ ராசிகளும் அவரவரதுவினைப் பயனையூட்டுவதற்காகவே உங்களை யாம் படைத்தோம் அவ்வாறே நடக்கும் படியும் உங்களுக்குஉத்தரவிட்டோம். ஆனால் நீங்கள் எமது உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல் மீறி நடக்கத் தொடங்கினீர்கள், நீங்கள் சுதந்திரமானவர்களாகிக் காலவ முனிவருக்கு தொழுநோய் அணுகாமல் இருக்க வரம் கொடுத்துள்ளீர்கள். ஆகவே நீங்கள் ஒன்பதுபேரும் பூலோகத்தில் பிறந்து காலவ முனிவர் தொழுநோயால் கஷ்டப்பட வேண்டிய கால அளவு வரை அந்த தொழுநோயால் துயர் அடைவீராக என்று சாபமிட்டார்.

### சாபம் நீக்கம்

சாபமொழி கேட்ட நவக்கிரகங்கள் இடி ஒலி கேட்ட பாம்புபோல. உடல்பதைத்து உள்ளம் வருந்தி பிரம்மதேவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எங்களை மன்னிக்க வேண்டும். காலவ முனிவரின் தவத்தின் சுவாலை. எம்முடைய மண்டலத்தை அடைந்து சுட்டெரியத் தொடங்கியது. அதனால்த் தான் அவர்முன் சென்று அவர் கேட்டவரத்தைக் கொடுத்து விட்டோம். அறியாமற் செய்த பிழையைப் பொறுத்துத் தங்களின் சாபத்துக்கு விமோசனம் ஒன்று கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

'அதுகேட்டு இரங்கிய பிரமதேவர்' நவக்கிரக நாயகர்களே! நீங்கள் நம்முடைய கட்டளையை மீறி நடந்து இந்தச் சாபம் பெற்றீர்கள். ஆயினும் சாபவிமோசனம் கேட்டு நிற்பதால், நீங்கள் பூலோகத்துக்குச் சென்று புண்ணிய பூமியான பரதகண்டத்தினை அடைந்து, தென் பாரதமாகிய தமிழ் நாட்டை எய்திக் காவிரியாற்றின் வடகரையில் அர்க்கவனம் என்னும் வெள்ளெருக்கங் காடு ஒன்று உள்ளது அங்கே தங்கியிருந்து கார்த்திகைமாதத்து முதல் ஞாயிற்றுக் கிழமை தொடங்கி பன்னிரெண்டு ஞாயிற்றுக் கிழமை முடிய எழுபத்தெட்டு நாட்கள் தவம் புரியவேண்டும்;

திங்கட்கிழமை தோறும் உதயத்துக்கு முன்னராகக் காவிரியில் நீராடிப் பிராணவரதரையும். மங்கள நாயகியையும் வழிபட வேண்டும். அத்தோடு உதயாதி ஏழுநாழிகைக்குள் அர்க்க இலையில் ஒருபிடி அளவு தயிர் அன்னம் வைத்து அதைப் புசிக்கவேண்டும். இவ்வரிய நோன்பைச் சிறிதளவு தவறும் நேராமல் செய்து வருங்கால் சாபவிமோசனம் கிடைக்கும் என்று கூறினார்.

அவ்விதமே நவநாயகர்கள் காவிரி நதியின் வடகரை வழியாக அர்க்கவனத்தை தேடி வந்து கொண்டிருந்தனர். தமக்கு முன்னே அவ்வழியில் அகத்தியர் செல்வதைக் கண்டு விரைந்து அணுகி வணங்கி தமக்கு நேர்ந்த சாப வரலாற்றையும் கூறி அர்க்க வனத்தைத்தேடுகிறோம் என்றனர். அகத்தியர் அவர்களைப் பார்த்து தாமும் அர்க்க வனத்திற்கு தான் செல்கிறாம் (வெள்ளெருக்கு வனம்) என்று அவர்களையும் அழைத்துச் சென்றார். அங்கே அவர்கள் காவிரியில் நீராடிப் பிராணவரதரையும், மங்கள நாயகியையும் வழிபட்டனர். இந்த நேரத்தில் காலவ முனிவரைப் பற்ற வேண்டிய தொழுநோய் பிரமனது சாபத்தால் நவக்கிரகங்களைப் பற்றியது. அவர்கள் அங்கமெல்லாம் மறைந்து, அழுகி, வருத்தியது. அவர்கள அகத்தியரை நோக்கி தாங்கள் தவம்செய்ய வேண்டியமுறையை அறிவித்தருளுமாறு வேண்டினர். நவககிரகங்களின் துயர நிலையை அறிந்த அகத்தியர் மிகவும் வருந்தி அவர்கள் தவம் செய்யும் முறையை விளக்கினார். அங்கனமே நவக்கிரகங்கள் வடகிழக்குப் பகுதிக்குச் சென்று, அங்கே விநாயகரைப் பிரதிட்டை செய்து சங்கல்பம் செய்து கொண்டு தவத்தை மேற்கொண்டனர்.

### நோன்பு கடைப்பிடித்தல்

கார்த்திகை மாதம் முதல் ஞாயிறன்று நோன்பு தொடங்கி கடுமையாக எழுபத்தெட்டு நாட்கள் வரை கடைப்பிடித்தனர். இந்த நோன்புக் காலத்தில் வரும், திங்கட் கிழமைகளில் விடிவதற்குமுன் காவிரியில் நீராடி பிரணவநாதரை வழிபட்டனர். உதயாதி ஏழரை நாழிகைக்குள் எருக்கு இலையில் ஒருபிடி தயிரன்னம் வைத்துப் புசித்தனர். இப்படி எழுபத்தெட்டு நாட்கள் நோன்பு முடிந்து, எழுபத்தொன்பதாவது நாள் திங்கட்கிழமை விடியலில் காவிரியில் நீராடி எழுந்தனர். தங்கள் உடம்பிலிருந்த தொழுநோய் பாதிக்குமேல் குணமாகியிருப்பதை வியந்து பிராணவரநாதரை வழிபட்டனர். இச் சமயத்தில் பிராணவரதரும் மங்கள நாயகியும் நவக்கிரக நாயகர்களுக்குக் காட்சி கொடுத்து வடகிழக்கில் நீங்கள் தங்கித் தவம் செய்த இடத்தில் உங்களுக்கெனத் தனி ஆலயம் உண்டாக்கி அது உங்களுக்குரிய தலமாக விளங்கட்டும். அங்கே வந்து உங்களை வழிபடுவோருக்கு நீங்கள் சுதந்திரமாக அனுக்கிரகங்கள் செய்யலாம் என்று கூறி மறைந்தனர்.

இத்தலம்தான் கும்பகோணத்தில் அமைந்திருக்கும் சூரிய நாராயணர் கோவில். நவக்கிரக தேவர்களே இவ்விதம் அவர்களுக்கு இட்ட கட்டளையை மீறியதற்கு பிரமதேவரால் தண்டிக்கப்பட்டால் நாம் எந்த மட்டில் என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது மிக அவசியம்.

# இராசி பலன்

02.3.2001
(மாசி 18, வெள்ளி)
ஸ்தமி பி.ப.4 26 வரை
கார்த்திகை பி.ப.12 46வரை
இராகு காலம் 10.58-12.28
சுப நேரம் 6.28-7.58
சித்தம்

**மேடம்**
உறவினர் வருகை, தெய்வ அனுகூலம், பிரயாணம்.

**இடபம்**
பொருள் வரவு. நண்பர்கள் சந்திப்பு, காரியத்தடை.

**மிதுனம்**
மனக்கிலேசம், இடமாற்றம், தனலாபம், பிரயாணம்.

**கடகம்**
மன அமைதி, கடவுள் நம்பிக்கை, சென்றஇடம் சிறப்பு.

**சிங்கம்**
பயந்த தன்மை. முயற்சி தாமதம், பணவரவு.

**கன்னி**
உடல் நலக்குறைவு, மனக் கவலை, பிரச்சினை வலுவடைதல்.

**துலாம்**
காரிய சித்தி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு.

**விருச்சிகம்**
கருமம் நிறைவேறுதல், முயற்சியில் வெற்றி, மன மகிழ்ச்சி.

**தனுசு**
பணவரவு, உறவுகள் இணைவு, முயற்சிகள நிறைவடைதல்.

**மகரம்**
மனத்திருப்தி, தூரப் பயணம், காரிய சித்தி.

**கும்பம்**
தனலாபம், உறவினர் வருகை, உடல் நலம் தேறுதல்.

**மீனம்**
மனக் குழப்பம், காரிய தாமதம், தெய்வ வழிபாடு.

(பழையநேரப்படி கணிப் பிடப்பட்டது.)

வளவன்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இப் மாதம் 28 - ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி. வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 161606 ஏ | 161606 பி |
| 161606 சி | 179401 ஏ |
| 179442 ஏ | 181459 பி |
| 181549 ஏ | 183088 ஏ |
| 183088 பி | 183127 ஏ |
| 183127 பி | 183211 ஏ |
| 183503 ஏ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 180384 ஏ | 180384 பி |

### கரவெட்டி

| | |
|---|---|
| 151188 ஏ | 151188 பி |
| 158216 ஏ | 158216 பி |
| 162037 ஏ | 162037 பி |
| 162037 சி | 162037 டி |
| 167332 ஏ | 167332 பி |
| 167388 ஏ | 167388 பி |
| 167413 ஏ | 167414 ஏ |
| 167414 பி | 169519 ஏ |
| 169519 பி | 174637 ஏ |
| 176230 ஏ | 176230 பி |
| 176314 ஏ | 176314 பி |
| 176377 ஏ | 176483 ஏ |
| 177833 ஏ | 177833 பி |
| 177871 ஏ | 177892 ஏ |
| 177892 பி | 177916 ஏ |
| 177980 ஏ | 177980 பி |
| 177988 ஏ | 177997 ஏ |
| 177997 பி | 178004 ஏ |
| 178010 ஏ | 180451 ஏ |
| 180451 பி | 180483 ஏ |
| 180483 பி | 180484 ஏ |
| 180484 பி | 180493 ஏ |
| 180493 பி | 180493 சி |
| 180493 டி | 180997 ஏ |
| 180997 பி | 180511 ஏ |
| 180511 பி | 180537 ஏ |
| 180560 ஏ | 180563 ஏ |
| 180593 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 179414 ஏ | 182691 ஏ |
| 182691 பி | 182811 ஏ |
| 182811 பி | 183036 ஏ |
| 183036 பி | 138138 ஏ |
| 183223 ஏ | 183224 ஏ |
| 183319 ஏ | 183321 ஏ |
| 183321 பி | 183335 ஏ |
| 183337 ஏ | 183341 ஏ |
| 183477 எ | 183477 பி |
| 184842 ஏ | 184842 பி |
| 184842 சி | 184870 ஏ |
| 184870 பி | 184870 சி |
| 184870 டி | 184870 ஈ |
| 184916 ஏ | 184940 ஏ |
| 184943 ஏ | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 146227 ஏ | 146227 பி |
| 162033 ஏ | 162033 பி |
| 162033 சி | 165420 ஏ |
| 167466 ஏ | 167466 பி |
| 169560 ஏ | 176296 ஏ |
| 176296 பி | 176329 ஏ |
| 176329 பி | 176329 சி |
| 176329 டி | 176329 ஈ |
| 176427 ஏ | 176513 ஏ |
| 177570 ஏ | 177570 பி |
| 177678 ஏ | 177923 ஏ |
| 178006 ஏ | 180379 ஏ |
| 180392 ஏ | 180392 பி |
| 180392 சி | 180392 டி |
| 180430 ஏ | 180430 பி |
| 180439 ஏ | 180445 ஏ |
| 180445 பி | 180445 சி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 175090 ஏ | 175090 பி |
| 175090 சி | 175090 டி |
| 181564 ஏ | 181564 பி |
| 181621 ஏ | 181621 பி |
| 182739 ஏ | 182757 ஏ |
| 182757 பி | 182757 சி |
| 182757 டி | 182828 எ |
| 182828 பி | 182865 எ |
| 182865 பி | 182865 சி |
| 183047 ஏ | 183349 ஏ |
| 183395 ஏ | 183429 ஏ |
| 183451 ஏ | 183451 பி |
| 183463 ஏ | 183463 பி |
| 183463 சி | 183472 ஏ |
| 183472 பி | 183475 ஏ |
| 183475 பி | 183475 சி |
| 183508 ஏ | 184907 ஏ |
| 184907 பி | 184919 ஏ |
| 184920 ஏ | 184931 ஏ |
| 184931 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 183383 ஏ | 183383 பி |
| 183383 சி | 183393 ஏ |
| 183393 பி | 183393 சி |
| 183393 டி | 183524 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 176825 ஏ | 176825 பி |
| 176825 சி | 176825 டி |
| 179305 ஏ | 180315 ஏ |
| 180315 பி | 183034 ஏ |
| 183235 ஏ | 183235 பி |
| 183316 ஏ | 183316 பி |
| 183327 ஏ | 183354 ஏ |
| 183365 ஏ | 183365 பி |
| 183379 ஏ | 183379 பி |
| 183402 ஏ | 183416 ஏ |
| 183416 பி | 183420 ஏ |
| 183425 ஏ | 183425 பி |
| 183425 சி | 183427 ஏ |
| 183455 ஏ | 183465 ஏ |
| 183465 பி | 183465 சி |
| 183465 டி | 183465 ஈ |
| 183465 எவ் | 183497 ஏ |
| 183497 பி | 184832 ஏ |
| 184951 ஏ | 184951 பி |


# அறிவித்தல்

## பனை அபிவிருத்திச் சபை பனம் கைப்பணி உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு

தரமான பனைசார் கைப்பணிப் பொருட்கள் பனை அபிவிருத்திச் சபையால் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். எனவே. இவ் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் தங்களினால் உற்பத்தி செய்யப்படும் பனம் கைப்பணிப் பொருட்களின் மாதிரியுடன் அருகாமையிலுள்ள கற்பக விற்பனை நிலையத்தில் அல்லது சபையின் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[கி/1542]

# இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

யாழ். உதை பந்தாட்ட லீக் நடத்தி வந்த 22 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டித் தெரிவின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பும் விழாவும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள E. S. பேரம்பலத்தின் அனுசரணையுடன் லீக்கின் தலைவர் எஸ். ரி. கணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலம்
03. 03. 2001 சனி (நாளை) மாலை 4.30 மணி
இடம்
துரையப்பா விளையாட்டு மைதானம்
பிரதம விருந்தினர்
திரு. க. இராசதுரை
(அதிபர் யாழ். மத்திய கல்லூரி)
சிறப்பு விருந்தினர்
திருமதி ஏ. எஸ். ஜெயரூபசிங்கம்
(யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி)

இறுதி ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதும்.

எம், பிரான்சிஸ்
செயலாளர்
யாழ் உ; லீக்

(கி-1546)

# ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிசமைத்த ஆடற்கலை

# 21ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி காணும் வழிகள்

திருமதி சுபாதினி தயாபரன்
ஆசிரியை, யாழ். இந்துமகளிர் கல்லூரி

(நேற்றைய தொடர்ச்சி)

இது ஒரு புறமிருக்க நாட்டியக் கலையின் விருத்தியில் கலா விமர்சகர்களின் பங்களிப்பு மிக அவசியமாகும். அதாவது ஒரு நாட்டின் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனம் இன்றியமையாததாகும். முக்கியமாக புதுமையானதொரு கலையாக்கத்தின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்தில் அதை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும், அதன் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்துக் காட்டுவதிலும் கலா விமர்சகரின் பணியை கலைஞர் எதிர் பார்க்கின்றனர். ஆனால் இங்கு கலைஞரின் விமர்சனங்கள் கலையை வளர்க்கும் நோக்குடனேயே இருக்க வேண்டும். இவை தவிர்த்து கலைஞரிடையே காணப்படும் பல்வேறு காரணங்களால் உண்மைக்குப் புறம்பான முறையில் விமர்சனம் செய்தலாகாது. இன்று போட்டி நிறைந்த இவ்வுலகில் இத் தன்மையைக் காண முடிகின்றது. ஒரு நிகழ்வைப் பார்த்து ரசித்தவர்கள் தமது உண்மையான உள்ளக் கருத்தை அல்லது வெளிப்பாட்டை எடுத்துக் கூற வேண்டும். அதை விட்டு வெறும் முகப் பொலிவுக்காகவோ, அல்லது பாராட்ட வேண்டும் என்பதற்காகவோ தமது வார்த்தைகளைக் கூறக் கூடாது. தமது உளமார்ந்த கருத்துக்களைக் கூறுவதன் மூலம் தான் கலைஞரின் கலையாற்றலை மெருகூட்டி கலைஞனானவன் தனது கலைப் படைப்பின் சரி பிழைகளை இனங்கண்டு தொடர்ந்தும் தமது கலைப் படைப்புக்களை சிறப்பான முறையில் வளர்த்தெடுக்க முடியும்.

### நிறுவனங்களின் பங்களிப்பு

இன்று நாட்டியக் கலையின் வளர்ச்சியில் நிறுவனங்களின் பங்களிப்பு இன்றியமையாததொன்றாகவேஉள்ளது. நிறுவனங்கள் என்னும் போது தனியாரால் நடாத்தப்படும் கலாமன்றங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் போன்றன உள்ளடக்கப்படுகின்றன. அரச நிறுவனங்கள் என்னும் போது பல் கலைக்கழகங்கள், பாடசாலைகள், பயிற்சிக் கலாசாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன.

இந் நிறுவனங்கள் மூலம் நடனக் கலை பயிற்றுவிக்கப்பட்டு மாணவர்கள் உருவாக்கப்படுகின்றனர். பாடசாலையின் கலைத் திட்டத்தில் 1972 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த கலைத் திட்டத்தின் மூலம் அழகியற் கலைகள் பாடசாலைக் கலைத்திட்டத்தினுள் சேர்க்கப்பட்டு இன்று க. பொ. த.உயர்தர வகுப்பில் கலைப்பிரிவினரது ஒரு விருப்பப் பாடத் தெரிவாக மேலுயர்த்தப்பட்டு பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்புக்கு வழி அமைத்திருப்பது அரச நிறுவன ரீதியான நாட்டியக் கலையின் வளர்ச்சிக்கு அவை ஏற்படுத்தி தந்துள்ள முன்னேற்றகரமான திட்டங்களாகும்.

அது போல தனியார் நிறுவனங்களை கலாமன்றங்களினால் வட இலங்கை சங்கீத சபை நடத்தும் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தி உயர்தரத்தில் கலைத் துறையைக் கற்காது விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் கற்கும் மாணவரும் அக் கலைகளில் ஒன்றான நடனத்தை உயர் நிலை தரத்தில் கற்று முடிக்க உதவி செய்கின்றன.

### நாட்டிய நிகழ்வுகள்

இன்று இலங்கையில் யாழ் குடாநாடு மட்டுமன்றி கொழும்பு, வவுனியா, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி போன்ற தமிழர் வாழும் இடங்களில் இக் கலாமன்றங்கள் நடத்தப்பட்டு மாணவரை தயார்ப்படுத்தி வடஇலங்கை சங்கித சபையால் நடத்தப்படும். பரீட்சைகளுக்கு தோற்றுவிக்க வழி சமைத்து கொடுக்கின்றார்கள். இந்நிகழ்வானது ஒரு குறுகிய தொகுதியினர் மட்டுமே நடனக் கலையை கற்க வழி சமைக்காது ஆர்வமுள்ள ஏனையவரும் கற்று நிறைவு காண வழிகாட்டியிருப்பது நடனத் துறை வளர்ச்சியில் நிறுவன ரீதியான ஓர் வெளிப்பாடாக உள்ளது. இவ்வாறு நிறுவனங்கள் நடனத்துறையை வளர்க்கும் அதே சமயம் சில நிறுவன மாணவர் நாட்டிய நிகழ்வை தேவையற்ற முறையில் மேடையேற்றுகிறார்கள். நாட்டிய அவைக்காற்றுமை என்பது சாஸ்திரீய நடன வரையறைக்குட்பட்டு கட்டுக் கோப்புடன் அவைக்காற்றும் போதே சீரிய வளர்ச்சி காண முடியும். அல்லாதுவிடில் அது மக்களால் விமர்சிக்கப்படுமொன்றாகவே காணப்படும். மேலும் அன்று தொட்டு இன்று வரைநாட்டிய நிகழ்வு என்னும் போது ஒரே பாணியிலேயே பெரிய மாற்றங்களின்றி மேடையேற்றப்படுகின்றன. இது மக்களிடையே மன சலிப்பை ஏற்படுத்துகிறது. எனவேபுதுமை காணும் முகமாக நிகழ்வுகளை மேடையேற்றுவதன் மூலம் பரதநாட்டியக் கலையை ஈழத்திலும் மேலும் மேலும் வளர்ச்சி காணச் செய்ய முடியும்.

### ஏற்றத்தாழ்வுகள்

இவ்வாறே பரதநாட்டியத்தை முன்னெடுத்துச் செல்லும் இவ்வேளையில் சில மாணவர் வெறும் பொழுது போக்கிற்காகவோ, அன்றி குறிப்பிட்ட தேவைக்காகவோபரதநாட்டியத்தைகற்று இடை நடுவில் அதை நிறுத்தி விடுகின்றனர். சிலர் நாட்டு நிலைமையை காரணம் காட்டுகின்றனர். இந்நிலை மாற்றமடைய வேண்டும். சில மாணவர் நடன பாடத்தைக் கற்கும் போது பல பொருளாதாரக்கஷ்டங்களை எதிர் நோக்குகின்றனர். அந் நிலையில் வசதி படைத்த மாணவர் அரங்கேற்றங்களையோ அல்லது வேறு பல நிகழ்வுகளையோ செய்யும் போது வசதி குறைந்த மாணவர் மத்தியில் பல ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுத்தப்பட்டு உளவியல் ரீதியாக தாக்கத்துக்குள்ளாகின்றார்கள். இதனை ஆசிரியர், நிறுவன அமைப்பாளர், சமூக விரும்பிகள் ஓரளவு நிவர்த்தி செய்யலாம்.

### குழு நிகழ்வு நன்று

அந்த வகையில் பரதநாட்டியத்தின்விருத்திப்பாதையை நோக்கும் போது ஒரு மாணவர் தனியே அரங்கேற்றம் செய்ய வேண்டும் என்ற நியதி இன்றி இவர்கள் யாவரையும் இணைத்து ஒரு நாட்டிய நாடகமாகவோ வேறு குழு நிகழ்ச்சிகளாகவோ மேடையேற்றும் போது அது மாணவர்கள் யாவரும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் சந்தர்ப்பம் கிடைப்பதோடு அவரவர்க்கு ஏற்படும் செலவின் ஒரு பகுதியைக் குறைத்து குறைந்த செலவில் அவரவரிற்குரிய அரங்கேற்ற நிகழ்வாக அமைந்து மாணவர்கள் யாவருக்கும் நடனம் கற்றலில் உற்சாகத்தை ஊட்டுவதோடுபரதநாட்டியத்தை விருத்தியடையச் செய்யவும் முடியும்.

இவ்வாறேபரதநாட்டியம்ஒரு புறம்தனது பாதையில்சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் கலைஞர்களிடையே ஏற்படும் இடைவினை வேறுபாடுகளும் வலுவடைந்து செல்கின்றது இந்நிலை மாற்றமடைந்து செல்ல வேண்டும் கலைஞர்கள் யாவரும் 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பதற்கிணங்கஒற்றுமையுடனும்புரிந்துணர்வுடனும்ஒன்றுபட்டுச் செயற்படுவாராயின கலையை முன்னெடுத்துச் செல்ல ஏதுவாகும்.

### கலைஞர்கள் வெளியேற்றம்

இன்றைய கால கட்டததில் எம் நாட்டிலே இருந்து கலையை நன்கு கற்றுத் தேர்ந்த வர்களில் பலர் எமது நாட்டிற்கேசேவைசெய்யமுடியாது திருமணமானபின்வேறு நாடுகளிற்குச் சென்று விடுகின்றனர். இச் கலைஞர்களின்வெளியேற்றம்எமதுநாட்டிற்கு உடனடி இழப்பாக இருந்த போது உலக ளாவிய ரீதியில் எம் கலை கலைஞர் வேறு நாடுகளிற்கு சென்று அங்கும் பரத நாட்டியக் கலையை வளர்ப்பதன் மூலம் தொடர்ந்தும் நாட்டியக் கலையை விருத்தி செய்ய முடியும். அதே போல் எமது தாய் மண்ணில் பல்கலைக் கழகத்தில்கல்வியைப் போதிக்கும் ஆசிரியர் இழக்கப்படுவதால் எமது மாணவர்க்கு உடனடியாக ஓர் இழப்பு ஏற்படுகின்றது. இதனை ஈடு செய்வது என்பது சற்றுக் கடினமாகவே உள்ளது. எனவே எமது மாணவர்களுக்குஇக்கலையை இக் கட்டான வேளையில் தொடர்ந்தும்வளர்த்தெடுக்க இங்குள்ள கலைஞர் ஆக்கமும் ஊக்கத்துடனும் தொழிற்படுவதன் மூலம் வளர்ச்சியை நலிவுறாது பாதுகாத்துக் கொள்ள முடியும.

### கலைஞர்கள் அவா

எனவே காலங்காலமாக வளர்த்தெடுக்கப்பட்டு வரும் பரதநாட்டியக் கலையானது இன்னும் பல்லாயிரக் கணக்கான நூற்றாண்டு காலம் சிறந்து விளங்கும் கலையாகவும் கலையின் பத்தை ஏற்படுத்துவதாகவும்இருக்க வேண்டும. அதற்கேற்ற வகையில் நாட்டியக் கலை வளம் பெற சமூகம் தனது பங்களிப்பை செய்ய வேண்டும். கலைஞர்களும் தமது பணியைமுன்னெடுதுச் செல்லவேண்டும். நாட்டியக் கலை சமூக விழுமியம் நிறைந்ததாக போற்றப் படக் கூடியவகையில்வளர்ச்சி பெறச் செய்ய கலை உலகமே தலை சாய்த்து வழி சமைத்து விட வேண்டும் என்பதேகலைஞர் எல்லோரினுடைய அவாவுமாகும்.

'கலையின்பமேநிலையின்பம்'

## இடம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த திருமதி நா. பாலசுப்பிரமணியம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு இடம் மாற்றம் பெற்றுள்ளார்.

இந்தவருடத்திற்கு திருமதி ச சிவானந்தன் நியமிக்கப் பட்டுள்ளார். (உ-6)

## பொலிஸ் நிலையம் திறப்பு

(சங்கானை)

சங்கானை பொலிஸ்நிலையம்நேற்று திறந்து வைக்கப் பட்டது.

கடந்த 20 வருடங்களின் பின் சங்கானை பொலிஸ் நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-123

## அடையாள அட்டை கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம்]

சித்தன்கேணி சிவன் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்துரை துரைசிங்கம் என்பவருடைய விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரிக்' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

[செ]

## ஆட்லறி தாக்கு

[வடமராட்சி கிழக்கு]

நேற்று காலை 6 மணியளவில், தென்மராட்சி இராணுவ நிலைகளிலிருந்து விடுதலைப் புலிகள் நிலைகொண்டுள்ள பகுதிகளை இலக்கு வைத்து இராணுவத்தினர் ஆட்லறி தாக்குதல்களை நடாத்தினர். [உ-43]

## மலிவு விற்பனை

(கொழும்பு)

ரீ, 56-ரக துப்பாக்கிகள், ரவைகள, கைக்குண்டுகள் என்பன கள்ளச் சந்தையில் மிக மலிவாக விற்பனை செய்யப்படுவதாக தெரிய வருகிறது. (செ)

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் உட்புற வீதிகள் திருத்தும பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது இவை நீண்டகாலமாக செப்பனிடப் படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

## விடுதலைப் புலிகளுக்கு தடை

# பிரிட்டன் அரசுக்கு நன்றி தெரிவிக்க கதிர்காமர் பிரிட்டன் பயணம்

[கொழும்பு]

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விரைவில் பிரிட்டனுக்கான உத்தியோக பூர்வ பயணம் ஒன்றினைமேற்கொள்ளவுள்ளார்.

தமது கோரிக்கையை ஏற்று விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்யும் தீவிரவாத அமைப்புகள் பட்டியலில்பிரிட்டன்சேர்த்தமைக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இவர் பயணம் அமையவுள்ளதாக உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மற்றும்அரசியல் கட்சிகள், அமைச்சர்கள் மக்கள் சார்பாக இவர் பிரிட்டன் அரசுக்கு நன்றியை தெரிவிக்கவுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் கதிர்கமார் விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்யக் கோரி ஏற்கனவே பல தடவைகள் பிரிட்டன் சென்றமை குறிப்பிடத்தக்கது. [உ-7[

## பதுங்கித் தாக்கியதில் 7 புலிகள் மரணம்

(கொழும்பு)

கடந்த 25 ஆம் திகதி காலை மடுவுக்கு வடக்குப் பக்கமாகவுள்ள பாலம்பிட்டி என்னும் பகுதியில் படையினர் பதுங்கி இருந்து தாக்கியதில் 7 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப் பட்டிருக்கலாம் என்று விசேட ஊடக தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தின் போதுவிடுதலைப் புலிகளும் திருப்பித்தாக்குதல் நடாத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ)

## தபால் பரிசோதனை பிரதம தபாலகத்தில் இன்றுமுதல் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவிலிருந்து வெளிநாடுகள் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் தபால்களை பரிசோதிக்கும் நிலையம் யாழ். பிரதம தபாலகத்தில் இன்றுமுதல் இயங்கவுள்ளதாக பிரதம தபால்அதிபர் சி. மார்க்கண்டன் தெரிவித்தார்.

யாழ். குடாவில் மக்கள் மீளக்குடியமர்ந்த காலம் முதல் யாழ். பொலிஸ்நிலையத்திற்கு அண்மையிலுள்ள புனித பேதுரு ஆலய கட்டட பகுதியிலேயே தபால்களை பொலிஸார் பரிசோதித்து வந்தனர்.

மேற்படி கட்டடத்தை மேலும் பயன்படுத்துவதற்கான காலம் முடிவடைந்ததையடுத்து பொலிஸ்நிலையத்தை அண்மித்து வேறு பாதுகாப்பான கட்டடம் பெற்றுக்கொள்ள முடியாமையினாலேயே யாழ். பிரதம தபாலகத்தில் அவ் பரிசோதனையை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

(உ-2-10)

# பொது அறிவுவினாக்கள்

## இல: 46 தொகுப்பு ரீ. மயூரன்

★ **பின்வருவன நடை பெற்ற ஆண்டைத்தருக**

1) இலங்கையில் இலவசக்கல்வி புகுத்தப்பட்டது ———
2) ஒப்சேவர் செய்தித் தாள் வெளியிடப்பட்டது ———
3) இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி ஆரம்பமானது ——
4) கொலம்பஸ் அமெரிக்காவைக்கண்டு பிடித்தது ———
5) இரண்டாம் உலகப்போர் ஆரம்பமானது —————

★ **பின்வருவன உள்ள இடத்தினைத் தருக**

6) உலக சுகாதார நிறுவனத்தின் தலைமையிடம்———
7) இலங்கையில் உருக்குத் தொழிற்சாலை அமைந்த இடம் ————
8) இலங்கையில் சப்பாத்துத் தொழிற்சாலை அமைந்த இடம் ———
9) இலங்கையில் மா அரைக்கும் ஆலை உள்ள இடம் ————
10) குவாங்கோ நதி உள்ள நாடு ————

★ **11-20 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட 4 விடைகளில் சரியான ஒன்றைத் தெரிவு செய்க**

11) அமெரிக்காவின் அடிமைத்தனம் நீங்கியது
1) 1864 2) 1863 3) 1865 4) 1862
12) நாக சாகிதினம் கொண்டாடப்படுவது
1) மார்ச் 11 2) யூன் 4 3) ஒக்ரோபர் 27 4) ஓகஸ்ட் 9
13) இவரநெட் தகவல் தொடர்புக்கான சொப்ட் பெயர் தொகுப்புக்களை உருவாக்க சிறந்ததும் எழிமையானதுமான புரோக்கிராம் மொழி எது
1) C++ 2) ஜாவா 3) பஸ்கால் 4) டி வேஸ்
14) மலட்டுக் கோள் என்று எதனை அழைப்பர்
1) சுக்கிரன் 2) புதன் 3) செவ்வாய் 4) வியாழன்
15) பூமியைப் போல காற்று மண்டலம் உடைய கோள்
1) வியாழன் 2) செவ்வாய்
3) புதன் 4) புளுட்டோ
16) ஒளியின் வேகத்தை முதலில் கணித்தவர்
1) பிசேயஸ் 2) சுஞ்ம 3) றஷால் 4) வோர்
17) கிரெம்ளின் எங்குள்ளது
1) சீனா 2) இத்தாலி 3) சோவியத்ருஷியா
4) இலண்டன்
18) நபிகள் நாயகத்தின் துணைவியர் பெயர் என்ன
1) நசீர் 2) பாத்திமாஉம்மா 3) கதீஜா 4) மஞ்சிஜா
19) சர்வதேச வீடமைப்பு ஆண்டு எது
1) 1978 2) 1979 3) 1987 4) 1989
20) மொறிஷியஸ் தீவின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் யாது
1) கோதுமைமா 2) சீனி 3) தேயிலை 4) தேங்காய்

★ **பின்வரும் நாடுகளின் தலை நகரம் எது**

21) கனடா ————
22) துருக்கி ———
23) கியூபா ————
24) பிரேசில் ————
25) உகண்டா ————

★ **பின்வரும் கண்டு பிடிப்புக்களை நிகழ்த்தியவர் யார்**

26) சலவை இயந்திரத்தை கண்டறிந்தவர் —————
27) றேபனை கண்டறிந்தவர் —————
28) மின் தடை விதியை வகுத்தவர் —————
29) ஒலிப்பதிவை கண்டறிந்தவர் ————
30) விசர்நாய்க் கடி மருந்தை கண்டறிந்தவர் ————

★ **பின்வருவனவற்றின் விரிவாக்கத்தை தமிழில் தருக?**

31) ICAO ————
32) IFC ————
33) IBRD —————
34) IDA ————
35) FAO —————
36) கரப்பந்தாட்டத்தை இலங்கைக்கு அறிமுகம் செய்தவர் யார்?
37) 1991 இல் உலக பட்டம் விடும் போட்டி எங்கு நடைபெற்றது?
38) சிராப்லிப் கப் வழங்கப்படுவது எவ்விளையாட்டிற்கு?
39) 1994 இல் ஆசிய விளையாட்டு எங்கு நடைபெற்றது?
40) 1948 இல் ஒலிம்பிக் போட்டி எங்கு நடை பெற்றது?

**குறிப்பு:-**

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 08-03-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

### அறிவியல் பகுதி
### வினா இல: 46

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................
சொந்த முகவரி: ..............................
கற்கும் பாடசாலை : ..............................
மாணவர் கையொப்பம் : ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# பொது அறிவு வினா இல 45 விடைகள்

01) 1841
02) 1945
03) 1871
04) 1792
05) 1978
06) நியுயோர்க்-அமெரிக்கா
07) சவுதிஅரேபியா
08) தென் ஆபிரிக்கா
09) அமெரிக்கா
10) இத்தாலி
11) குறோன்
12) மாலைதீவு
13) சிறாப் பூஞ்சி
14) பிலிப்பைன்ஸ்
15) வோல்ரா
16) மெக்ஸிக்கோ
17) க.சொர்ணலிங்கம்
18) கபிலர்
19) அவுஸ்திரேலியா
20) கி பி 596
21) ஒக்ரோபர் 01
22) டிசம்பர் 06
23) ஏப்பிரல் 29
24) ஜுன் 02
25) ஆகஸ்ட் 02
26) சினாவில்
27) றொபேட்வால் போல்
28) யூல
29) நாசா
30) சிவப்பு அல்கா
31) சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்
32) வியாபாரம் இறுப்புத் தொடர்பான பொது ஒப்பந்தம்
33) பசுபிக் பிராந்திய உல்லாசபயணிகள் சங்கம்
34) சர்வதேச வளர்ச்சி அமைப்பு
35) சர்வதேச வளர்ச்சி வங்கி
36) தாய்லாந்து
37) லூசன் நகரில்
38) 5½ அவுன்ஸ்
39) லண்டன்
40) பிங்பொங்

# பொது அறிவு வினா இல-45

**அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர் பெயர் விபரம்**

★ ஜெ. மயூரன் கல்லூரிவீதி வட்டுக்கோட்டை.
★ சிவகுமாரன் சயந்தன் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி.
★ செ. ஜெரீம் நிரோஷன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி:
★ ச. கிருஸ்ணவத்சன் யாழ். இந்துக்கல்லூரி.
★ தட்சாயினி தர்மகுலசிங்கம் நவாலி வீதி ஆனைக்கோட்டை.
★ ஜீவிகா விவேகானந்தன் யாழ்பாணம் மகளிர் கல்லூரி
★ கிருஷாந்தி 41/1 அரசவீதி நல்லூர்:
★ ரீ: கௌசி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,

## மாணவன் கை முறிந்தது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மெய்வல்லுநர் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த மாணவன் கை முறிந்த நிலையில் யா/போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யா/ சென் சாள்ஸ் மகா வித்தியாலய மாணவன் பத்திநாதன்யூட் வின்சன் (வயது 16) என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6-2

## கிரிகெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணிக்கும் இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-9)

# செய்தித் துளிகள்

## மெய்வல்லுநர் திறனாய்வு

(மந்துவில்)

யா/வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலய மெய்வல்லுநர் திறனாய்வும், செயற்பாட்டறைத் திறப்பு விழாவும் இன்று மு. ப. 10 மணியளவில் பாடசாலை அதிபர் சு. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராகதென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் மு வ. செல்வராஜா கலந்து கொள்ளவுள்ளார். (உ-39)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி புனித தெரசாள் மகளிர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப. 1 30 மணிக்கு கல்லூரி அதிபரின் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-9)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் சி சி. த.க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு, நாளை சனிக்கிழமை பி. ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் இ: அருணாசலம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவஸ்ரீ சி. இரவீந்திரசர்மா முதன்மை விருந்தினராகவும் கிராம அலுவலர் வ. பன்னீர்ச்செல்வம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

★ ★ ★

(செம்பியன்பற்று)

குடத்தனை அ. த. க. பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பி.ப: 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது:

அதிபர் கே: யோகநாதன் தலைமையில் நடை பெறும் இப்போட்டிக்கு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ-42)

★ ★ ★

(செம்பியன்பற்று)

புலோலி கிழக்கு அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை சனிக்கிழமை பி ப. 2.00 மணிக்குநடை பெறவுள்ளது:

அதிபர் ஆ. மகேசு தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்குவடமராட்சிவலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராக் கலந்து கொள்கிறார். (செ-42)

## அமைச்சரிடம் கோரிக்கை

(சங்கானை)

சரித்திரப் பிரசித்திபெற்ற பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்திற்கு பொது மக்கள் சென்றுவர அனுமதி பெற்றுத் தருமாறு வலி தென்மேற்கு பிரதேச சபைத்தலைவர் அன்ரன் ஜோன்சன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும், யாழ் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் கே. விநாயகமூர்த்தி... குகேந்திரனையும் கோரியுள்ளார். (உ-123)

## ஆங்கில மொழி தேர்ச்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் அரச ஊழியர்களுக்கான ஆங்கில மொழி தேர்ச்சிப்பரீட்சை இம்மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். வேம்படி உயர்தர பாடசாலை பரீட்சை மண்டபத்தில் இடம் பெறவுள்ள இப் பரீட்சையில் 130 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் நேற்று வியாழக்கிழமை தபாலில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ் கல்விப்பணிமனை பரீட்சைப் பிரிவு தெரிவித்துள்ளது: (உ-12)

## விளையாட்டு அரங்கம்

தம்புள்ளயில் கட்டப்பட்டு வரும் இலங்கையின் நான்காவது சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கின் வேலைகள் முடிவடைய விருப்பதையடுத்து எதிர் வரும் 23 ஆம் திகதி முதலாவது போட்டி இங்கு நடை பெறவுள்ளது.

இந்த ஆரம்பப் போட்டியில் இலங்கை- இங்கிலாந்து அணிகள் ஒரு நாள் போட்டியில் விளையாடவுள்ளன. உ10

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் திணைக்களம் தாபன ரீதியாக நடத்தும் தொழிலாளர் கல்வி சம்பந்தமான கருத்தரங்கு இன்று 10 மணிக்கு உடுவில் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (உ-6)

## கண்ணிவெடிகள் மீட்பு

(கொழும்பு)

முகமாலைப் பகுதியில்கடந்த 27 ஆம் திகதியன்று 90 கண்ணிவெடிகள் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டனவென விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. [உ-9]

## மாதகலில் சந்தை

[சங்கானை]

மாதகல் பகுதியில் மூன்றரை இலட்சம் ரூபா செலவில் புதிய சந்தை ஒன்று அமைக்கப்படவுள்ளது:

வலிதென் மேற்கு பிரதேச சபையின் நிதி மூலம் அமைக்கப்படவுள்ள இப் பொதுச் சந்தைக்கான அமைவிடத்தினை மாதகல் வாசியான எ. கே. எட்வேட் என்ற பொது மகன் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சந்தை அமைக்கப்படுவதன் மூலம் மாதகல் பகுதி மக்கள் சந்தைச்செயற்பாடுகளை மேற்கொள்வதில் இதுவரை காலமும் அனுபவித்து வந்த இன்னல்கள் தீரும் என எதிர்பார்க்கப்படுகிறது: [உ-123]

## 301 தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம், யாழ். குடா நாட்டிற்கு நேற்றைய தினம் 301 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன:

இதேவேளை, மேற்படி கப்பல் மூலம் யாழ். குடாநாட்டில் இருந்து 49 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எடுத்துவரப்பட்ட தபால் பொதிகள் உடனடியாகவே தரம் பிரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படவுள்ளன: [உ-12]

## இன்று ஒரு தகவல்

# நோயின்றி வாழ அழுங்கள்

கவலையைத் தீர்ப்பது கண்ணீர் என்று தான் இது வரை கருதி வந்தார்கள். வியாதிகளைத் தீர்க்கும் மருந்தாகவும் கண்ணீர் பயன் படுகிறது. நோயாளிகள் வியாதியின் வேதனையைத் தாங்க முடியாமல் அழுது கண்ணீர் வடிக்கிறார்கள். இவர்கள் சொரியும் கண்ணீர் அவர்களின் வியாதியை விரைவாகக் குணப்படுத்தி விடுகிறது. தாங்க முடியாத சோகத்தினால் ஒருவர் கண்ணீர் வடிக்கும் போது, உடலிலுள்ள பல நோய்க் கிருமிகளும், கெட்ட நீரும் கலந்து வெளி வந்து உடலைச் சுத்தமாக்குகிறது.

கண்ணீர் சுரப்பிகளிலிருந்து வெளிவரும் உப்புக் கலந்த நீர் தான் கண்ணீர். இதில் சர்க்கரை. புரதம் முதலிய சத்துக்களும் நோய்க் கிருமிகளை ஒழிக்கும் கிருமிகொல்லிகளும் இருப்பதாகக் கண்ணீர் ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். இதிலுள்ள கிருமிகொல்லிகள உடலில் நோய் வருவதைத் தடுக்கின்றன. கண்ணீரின் இரசாயனத் தன்மை ஒவ்வொருவரிடையேயும் மாறுபட்டு உள்ளது. சிலருடைய கண்ணீர்வெங்காயச் சத்து கலந்திருக்கும் கண்ணீர்ப்புகைக்குண்டுபோட்டதும் அதைச்சமாளிக்க கண்ணில்வெங்காயத்தை வைப்பது இதனால் தான். ஆண்களின் கண்ணீருக்கும், பெண்களின் கண்ணீருக்கும் வேறுபாடு உண்டு. மஞ்சட் காமாலைக்காரர் மஞ்சள் நிறத்தில் கண்ணீர் வடிப்பர் எந்த அளவுக்கு நோய்க்கிருமிகள் வெளியாகின்றன என்ற உண்மையைத் தெளிவாகத் தெரியாவிட்டாலும்கிருமிகள் வெளியாகின்றன. என்பது உண்மையே!

நன்றி

கலைக்கதிர் - மார்ச்சு 1965

# தமிழீழக் கோரிக்கைக்கு விடுதலைப்புலிகளுக்கு தடையில்லை

(கொழும்பு)

'விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடுவதற்காக அவர்களை நாம் தடைசெய்யவில்லை'.

இவ்வாறு பிரிட்டிஷ் உள்துறை அமைச்சின் இராஜாங்க அமைச்சர் சார்ள்ஸ் கிளார்க் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டதாலேயே அவர்களைத் தடைசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது

கடந்த புதன் கிழமையன்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாரும் தமிழீழத்திற்காகப் போராடலாம் அதனை யாரும் தடுக்கவில்லை; தடுக்கவும் முடியாது ஆனால் மனிதப் படுகொலைகள் இடம் பெற்றால் தடுக்க வேண்டி ஏற்படும். (செ)

## தற்கொலைகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில், இடம் பெயர்ந்த மக்கள் வாழும்பகுதிகளில் தற்கொலை புரியும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-8)

## போஷாக்கு விழிப்புணர்வு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார பரிசோதகர் பிரிவுகள் தோறும் கர்ப்பிணித்தாய்மாருக்கான போஷாக்கு விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு பிரிவுகளிலுமுள்ள குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள் இப்பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றனர். (உ-23)

## பிக்குமார் பற்றாக்குறை பிரதமர் பெருங்கவலை

[கொழும்பு[

இலங்கையில் பௌத்த பிக்குமார் பற்றாக்குறையாக உள்ளதாக பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்காகவலை தெரிவித்துள்ளார்.

இதனால்இலங்கையிலுள்ள பல பௌத்த விகாரைகள் மூடப்படவுள்ளதாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாக விகாரைகளைப் பராமரிக்க முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## வலிதென் மேற்குபிரதேசசபை கலாசார மண்டபம் விரைவில் பாவனைக்கு

(சங்கானை)

வலிதென்மேற்கு பிரதேச சபைக் கட்டடத்திற்கு அருகில் 30 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் கலாசார மண்டப அமைப்புப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

வலிகாமம் பகுதி மக்களின் மங்களகரமான மற்றும் பொது நிகழ்வுகளை எதுவித சிரமங்களு மின்றி நடத்தும் வகையில் அமைக்கப்படும் இக்கலாசார மண்டபம் இம்மாத நடுப்பகுதியில் மக்கள் பாவனைக்காக விடப்படும் என வலிதென் மேற்கு பிரதேச சபை செயலாளர் பிரான்ஸிஸ் விக்ரர் தெரிவித்துள்ளார், (உ-123)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 43 வது தேசிய மகாநாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 13 வது தேசிய மகாநாடு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம் மகாநாட்டிற்கு வெளிநாடுகளில் இருந்தும் அரசியல் பிரமுகர்கள் ஒரு லட்சம் பேர் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ)

## பவளவிழா காணும் சிவராமலிங்கம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

ஆசான் சிவராமலிங்கம் பிள்ளையின் பவள விழா நிகழ்வு, 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி ப 2 மணிக்கு யா/இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில், வரவேற்புரையை கலாநிதி க. குணராசாவும் ஆசியுரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகள், பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

கௌரவிப்புரையை மூதறிஞர் க. சொக்கலிங்கம் ஆற்றுவார்.

பாராட்டுரைகள் மற்றும் மணிவிழா நூல் வெளியீடு என்பனவற்றை தொடர்ந்து நூல் நயப்புரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்குவார். (உ)

## நிவாரணச் சிட்டைகள்

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெறுவோருக்கான சிட்டைகள் கடந்த 28 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுவருவதாக பிரதேசசெயலர் எஸ். ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்

இடம் பெயர்ந்தோர் நிவாரணம், சமுர்த்திநிவாரணம், மீனவர்நிவாரணம் ஆகியவற்றைப் பெறுவோரே தமது கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு அதற்கான நிவாரண சிட்டைகளை பெறலாமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-23)

## வீதியில் வீசிய குப்பை பீதியால் மக்கள் சச்சரவு

(யாழ்ப்பாணம்)

வீதியில் கொட்டப்பட்ட குப்பையால் குடியிருப்பாளர்களுக்கிடையே வீண் சச்சரவுகள் ஏற்பட்ட சம்பவம் ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீதிக்கரையோரமாக கொட்டப்பட்டிருந்த குப்பையில் சிவப்பு மஞ்சள் மாலைகளும்தடைசெய்யப்பட்ட படங்கள் சிலவும் காணப்பட்டதால் பீதியடைந்த சிலரே ஒருவர் மீது ஒருவர் சாடி முரண்பட்டுக் கொண்டனர்.

இறுதியில் மேற்படி பொருட்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதையடுத்து முரண்பாடு தீர்த்துவைக்கப்பட்டது. [உ-12]

## கல்வி அபிவிருத்தியை கண்காணிக்க குழு

(மந்திகை)

வடமராட்சி கல்விவலய பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியை கண்காணிப்பதற்கென குழுக்கள் அமைக்கப் படவுள்ளன.

பாடசாலைகளில் நடைபெறுகின்ற கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு வேலைத் திட்டங்கள், பாடசாலை கற்கை செயற்பாடுகள் என்பவற்றை கண்காணித்து கல்வி அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகளை அமைக்கப்படவுள்ள குழுக்கள் வழங்கவுள்ளன.

அத்துடன், வகுப்பறை பாவனை, பாட வேலைத்திட்டங்கள் என்பவற்றையும் இக்குழுக்கள் மேற்பார்வை செய்யவுள்ளதாக வடமராட்சி கல்விவலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதிக்கல்விப்பணிப்பாளர், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கவுள்ளனர். (உ-23)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/பெரியபுலம் மகாவித்தியாலய மேற்பிரிவு விளையாட்டு விழா இன்று பி.ப 1. 45 மணிக்கு இடம் பெறவுள்ளது

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ. த. விக்னராசா கலந்துகொள்வார்.

யா/பல்கலைக்கழக ஆங்கிலத்துறை தலைவி திருமதி சாந்தகுமாரி விக்னராசா பரிசில்களை வழங்குவார். (உ)

## கண்டிகிரிக்கெட்மைதானம் அதிஉயர் பாதுகாப்பு வலையம்

(கொழும்பு)

கண்டியிலுள்ள அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் மைதானம் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன் 300 மீற்றர் தூரத்திற்கு பொலிஸார் கடுங்காவலில் ஈடுபட்டுள்ளனர்.

இங்கிலாந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறலாம் எனக் கருதியே கிரிக்கெட் மைதானமும் அதனைச் சூழவுள்ள பிரதேசமும் கடும் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதாக மத்திய மாகாண கிரிக்கெட் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார் (செ)

## யா. வேலணை மேற்கு நடராஜ வித்தியாலய நூலக திறப்பு விழா இன்று

(ஊர்காவற்றுறை

யா/ வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நவீன வசதிகளுடனான நூலகம் மற்றும் நீர்த்தாங்கி வகுப்பறை கட்டடம் என்பன இன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

பாடசாலை அதிபர் கு. சரவணபவானந்தன் தலைமையில் மு. ப. 10. 00 மணியளவில்இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் தீவககல்வி வலயப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் எஸ்.மதனராஜா, வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி, பேராசிரியர் செ. பாலச்சந்திரன் உள்ளிட்ட இன்னும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-75)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்ட சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழு நடத்தும்ஊடகவியலுக்கு ஓர் அறிமுகம்பயிற்சிப் பட்டறை நிகழ்வில் இன்று காலை 9.00மணிக்கு தொடக்கவுரையைத் தொடர்ந்து ;பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்' என்னும் தலைப்பில் பாதுகாவலன் ஆசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை,

சமகாலச் சூழலில் பத்திரிகையின் பணி என்னும் தலைப்பில் ஐயா சச்சிதானந்தம் வானொலியும் தொடர்பியலும் என்னும் தலைப்பில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன அறிவிப்பாளர் ஏ.எம். தாஜ் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளார்கள். (செ)

## பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் நாடகப் போட்டி

(மந்திகை)

வடக்கு கிழக்குமாகாண கல்வி பண்பாட்டுஅலுவல்கள் அமைச்சு பிரதேசசெயலர்பிரிவுகளில்நாடகப்போட்டிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:

இப் போட்டியில் பங்கு பற்றவிரும்புவோர்30நிமிடம் அடங்கிய அரசியல் கலப்பற்ற தற்கால சமூகபொருளாதார வாழ்வியல் அம்சங்களை உள்ளடக்கிய நாடக பிரதிகளை தயாரித்து பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என கேட்கப் பட்டுள்ளது. (உ-23)

## முரசொலி ச. ச. நிலையம் திருத்தப்படாத நிலையில்

(ஆவரங்கால்)

கதிரிப்பாய் முரசொலி சனசமூக நிலைய புனரமைப்பு பணிகள் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளன.

மேற்படி சனசமூக நிலையத்தினை புனரமைப்புச் செய்வதற்கென முதற்கட்டக் கொடுப்பனவாக 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட போதிலும், புனரமைப்புப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான மீதிப் பணத்தினை வழங்காமையினாலேயே இப்பணி இடைநடுவில் கைவிடப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது (உ-57)

# இந்தோனேசிய கலவரங்களை நிறுத்த உபஜனாதிபதி முயற்சி

[ஜகார்த்தா]

இந்தோனேசியாவில் இன வன்முறைகள் அதிகரித்ததை தொடர்ந்து நாட்டின் உப ஜனாதிபதி மேகவதி சுகர்ணோ புத்திரி போர்னியோத் தீவிற்குவிஜயம்ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தோனேசிய ஜனாதிபதி அப்துல் ரஹ்மான்வாஹிட் ஆபிரிக்க நாடுகளுக்கு இரு வார விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள நிலையில் நாட்டின் தற்போதைய தலைவராகச் செயற்படும் மேகவதி சுகர்ணோ புத்திரி தீவிரவாத வன் முறைகளைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அந்நாட்டு அரசியல் துறை அமைச்சர் சுசிலோ பம் பாங்யுடோயோனோ தெரிவித்துள்ளார்.

[உ-9]

# சூடான் தீவிரவாதிகள் வசம் இருந்த 2600 அடிமைச்சிறுவர்கள் விடுவிப்பு

(லண்டன்)

சூடான் தீவிரவாதிகள் வசம் இருந்த சுமார் இரண்டாயிரத்து 600 அடிமைச் சிறுவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகளினால்அடிமைகளாய் நடத்தப்பட்ட மேற்படி சிறுவர்கள் யுனிசெவ் நிறுவனம் மேற்கொண்ட கடும் முயற்சியின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட சிறுவர்கள் அனைவரும்8வயதுமுதல் 16 வயதிற்கு உட்பட்டவர்கள் எனவும் இவர்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் யுனிசெவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,முன்னரும் இதேபோன்று 9 ஆயிரம் அடிமைச் சிறுவர்களை யுனிசெவ் நிறுவனம் விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

# ரஷ்யாவிலேயே மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள்

## இடம்பெறுவதாக சுட்டிக்காட்டு

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஆட்சியில் ரஷ்யாவில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

உலக நாடுகளின் மனித உரிமை நிலைவரம் குறித்து வெளியிட்ட ஆண்டறிக்கையிலேயே அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரஷ்யாவில் அதிகளவான மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாகவும் அரசியல் அதிகாரம் படைத்தவர்கள் நீதித்துறையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாகவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செச்சினியாவில் உள்ள ரஷ்யப்படை வீரர்களால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், ரஷ்யா, அரசு ஊடகத்துறை மீது விதித்திருக்கும் அளவுக்கதிகமான அழுத்தம் தொடர்பாகவும் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை,

சீனா, இந்தோனேசியா நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து இவ்வறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

(உ-9)

# லண்டனில் ரயில் விபத்து 15 பேர் ஸ்தலத்தில் பலி

[லண்டன்]

பிரித்தானியாவில் இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் 15 பேர் கொல்லப்பட்டும் 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர்.

நேற்று முன்தினம் நேக்ஸாஸனில் இருந்து லண்டனிற்கு புறப்பட்ட மேற்படி ரயில், மணிக்கு 125 மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்த வேளை,சரக்கு ரயில் ஒன்றுடன் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

[உ-8]

# 4 பிள்ளைகளை விஷம் கொடுத்து கொன்ற பெண்

## கணவனின் தொல்லை காரணம்

[பெங்களூர்]

தாய் ஒருவர் தன்னுடைய நான்கு பிள்ளைகளுக்கு விஷம் கொடுத்து கொன்றதுடன் தானும் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்ட நெஞ்சை உருக்கும் சம்பவம் இந்தியா கர்நாடக மாநிலத்தில் நிகழ்ந்துள்ளது.

இத்தாயின் ஏனைய நான்கு பிள்ளைகளில் இரண்டு பேர் ஆற்றில் குதித்தும், தூக்குப் போட்டும் ஏற்கனவே தற்கொலை செய்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

அந்தப் பெண்ணின் கணவனது கொடுமை தாங்க முடியாமல் போனதாலேயே அப்பெண் இம் முடிவை தேடிக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

[உ-9]

# எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா போட்டியிட முடியாது

## ஆலடி அருணா அறிவிப்பு

(சென்னை)

எதிர்வரும் சட்டமன்றதேர்தலில் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா போட்டியிட முடியாது என அமைச்சர் ஆலடி அருணா திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

சென்னை கோட்டையில் நிருபர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் பிரிவு 8 இன்படி ஒருவர் 2ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனையைப் பெற்று அதன் மீது மேன் முறையீடு செய்திருந்தாலும் நீதி மன்றம் தண்டனையை நிறுத்தி இருந்தாலும் இப்போதுள்ள சட்ட விதிகளின் படி தேர்தலில் போட்டியிட முடியாது.

எனவே ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட வாய்ப்பே இல்லை என தெரிவித்தார்

ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாது என்று தேர்தல் கமிஷன் சொல்லவில்லையா என்று நிருபர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் தேர்தல் கமிஷன் உரிய நேரத்தில் அறிவிப்பதாக கூறியுள்ளது.

அத்துடன் 2 ஆண்டுகளுக்குமேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக் கூடாதென சட்ட விதிகளைச் சுட்டிக்காட்டி அந்தந்த மாநிலங்களில் உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு இந்திய தேர்தல் கமிஷன் சுற்றறிக்கை அனுப்பி உள்ளமையையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-9)

### செய்தித் தூறல்

★ பிரிட்டனில் கால் நடைகளில் ஏற்பட்ட நோய் காரணமாக பிரிட்டனின் தேர்தலை பிரதமர் பிளேயர் ஒத்தி வைப்பார் என எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

★ பர்மா சென்ற சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி பர்மா நாட்டு இராணுவ அரசாங்க தலைவர், எதிர்க்கட்சித் தலைவி அங்ஸான்ஸூகியுடன் பேச்சு நடத்தி உள்ளார்.

★ ஐ. நா. கியூபாதூதர் பென்ஸில் வேனியா பல்கலைக்கழகத்தில் ''கஸ்ட்ரோவுக்குப் பின் கியுபா'' என்ற தலைப்பில் உரையாற்ற விருந்ததை அமெரிக்கா தடுத்துள்ளது.

★ பாங்கொக்கில் சமூக விரோதிகளின் செயற்பாடுகள் காரணமாக போக்கு வரத்திலும் ஏனைய அரசசெயற்பாடுகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# மனித உரிமை மீறல் விசாரணை நடத்துவதில் ரஷ்யா அதிக ஈடுபாடு

(மொஸ்கோ)

செச்சினியாவில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்துவதில் ரஷ்யா அதிக ஈடுபாடு காட்டுவதாக,போரினால் பாதிக்கப்பட்டிருந்த செச்சினியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐரோப்பிய மனித உரிமைகள் குழுவின் உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த வாரம் மனித புதைகுழிகளிலிருந்து 10 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதையடுத்து இந்த அதிகாரி அங்கு பயணமானார்.

செச்சினியாவில் இடம்பெறும் அட்டூழியங்களுக்கு முடிவுகட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதை தனது விஜயத்தின்போது உணர்ந்ததாகஐரோப்பியமனித உரிமைகள் குழு ஆணையாளர் அல்ஹாராஜில்ரோ கூறியுள்ளார்.

(உ-8)

# பிரதமர் தலைமையிலான ஒற்றுமை அரசாங்கத்தில் இணைய இஸ்ரேலிய தொழிற்கட்சி இணக்கம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் பிரதமர் ஏரியல் ஷரோனின் ஒற்றுமை அரசாங்கத்தில் இணைய இஸ்ரேலிய தொழிற்கட்சி இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவித்துள்ளது.

தொழிற்கட்சியின் இந்த முடிவு இம்மாத இறதிக்குள் ஷரோன் கலப்பு அரசாங்கம் ஒன்றை அமைக்க வழிசமைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தொழிற்கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் ஷிமோன் பெரஸ் கருத்துத் தெரிவிக்கையில் சமாதானத்துக்கு நாடு ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றிருப்பதாகவும் கட்சி புன[illegible]ப்புக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார்.

தொழிற்கட்சி ஷரோனின் வலதுசாரி அரசாங்கத்தில் இணைந்து கொள்ள இணக்கம் தெரிவித்தமை பலஸ்தீன சமாதான முயற்சியை தொடர வழிவகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# உலகில் வயதுமுதிர்ந்தவர் 108 வது வயதில் மரணம்

(டோக்கியோ)

உலகின் மிகவும் வயது முதிர்ந்தவரான யப்பானைச் சேர்ந்த ஜின்கானிதனது 108 வது வயதில் கடந்த புதன் கிழமை காலமாகி விட்டார்.

இரட்டைச் சகோதரர்களான இவர்களில் இவரின் சகோதரியான ஹீன்நாரிடா கடந்த வருடம்காலமாகியது தெரிந்ததே.

(செ)

### காற்றுக்கென்ன வேலிதிரைப்பட விவகாரம்

# மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு

இந்தியாவின் திரைப்படத் தணிக்கைக் குழுவினர் காற்றுக்கென்ன வேலி திரைப் படத்தை வெளியிடும் அனுமதியை மறுத்ததை ஆட்சேபித்து அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் இது விடயம் தொடர்பாக முறைப்பாடு தெரிவித்துள்ளது.

இப்படத்தை தடை செய்தமையானது மனித உரிமைகளை மீறும் ஒரு செயலாகும்.

ஆரம்பத்தில் இப்படத்தில் இருந்து சில காட்சிகளை நீக்கி விட்டு வெளியிடலாம் என்று தணிக்கைக்குழுவின் தலைவர் ஐஸ்பல்சிங்கா தெரிவித்தபோதும் தற்போது காட்சிகள் நீக்கிய பின்பும் வெளியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தணிக்கைக் குழுவின் இத்தடையானது 1948 ஆம் ஆண்டு ஐ. நா ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்ட சர்வதேச மனித உரிமை சாசனத்தின் 19 ஆம் சரத்தை மீறும் செயல் என்று அந் நிறுவனம் தெரிவித்துள்ளது. உ-9

### இந்தியாவுக்கு உதவி

(புதுடில்லி)

இந்தியாவில் உருவாக்கப்படவுள்ள புதியரக போர் விமானங்களின் தயாரிப்புக்கு உதவ இஸ்ரேலும்,ரஷ்யாவும் விருப்பம் தெரிவித்துள்ளன.

(உ-8)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி
யாழ்ப்பாணம்

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தான் சாந்துயரம்தரும்

- குறள்

# வலம்புரி

## இழந்த சோகம்!

1948 இல் பிரித்தானிய அரசு தமிழர்களின் சுதந்திரத்தையும் சேர்த்து சிங்களப் பேரின வாதிகளிடம் தாரைவாத்துக் கொடுத்தது. அன்றிலிருந்து இன்று வரை தமிழினம் அடிமைப்பட்டு ஆற்றழிந்து போகிறது, இதற்கு அடிப்படைக் காரணம் பிரித்தானியா வென்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.


நிலைமை இப்படியிருக்கும் போது பிரித்தானியா விடுதலைப் புலிகளைத் தடை செய்ததன் மூலம், மீண்டுமோர் கெடுதியை தமிழினத்திற்கு செய்து விட்டது.

பிரித்தானியாவால் தடை செய்யப்பட்ட 21 அமைப்புக்களில் விடுதலைப் புலிகளை மட்டுமே தடைசெய்யக் கூடாதென கையெழுத்து மகஜர்கள் ரொனி பிளேயருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதன்போதாவது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார்கள். தமது உரிமைகளை புலிகள் மூலமே பெற்றுக் கொள்ள முடியுமென்று திடமாக நம்புகிறார்கள் என்பதை பிரித்தானிய அரசு புரிந்துகொள்ளாதது வேதனைக்குரியதே.

நேற்று முன்தினம் புலிகள் அமைப்பை பிரித்தானியா அரசு தடை செய்து விட்டதென்ற செய்தி தமிழ் மக்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி விட்டது. அச்சோகம் எதற்கு ஒப்பானதெனில் சத்திர சிகிச்சை செய்வதற்காக ஒருவரை அழைத்துச்செல்கிறார்கள் அவரின் நெருங்கிய உறவினர்கள் தியேட்டரின் வாசலுக்கு வெளியில்இறைவனைப்பிரார்த்தித்தபடி நிற்கிறார்கள். நேரம் நீள்கிறது. அச்சமயம்தியேட்டர்கதவுலேசாகத் திறக்கப்படுகிறது, டாக்டர்களும், தாதிமாரும்தலையைக்குனிந்தபடி எதுவுமே பேசாதபடி செல்கிறார்கள். எங்கும் மௌனம். அச் சமயம் அங்கே நின்ற உறவினர்களின் மன நிலை எப்படியிருக்கும். ஒரு கணம் சிந்தித்தால்அதேபோன்றஒரு வேதனையை-சோகத்தை பிரிட்டனின் புலிகள் மீதான தடை தமிழ் மக்களிடையே ஏற்படுத்தி விட்டது.

வெள்ளி நற்சிந்தனை

# நன்மை, தீமை பலனளிப்பவர்க்கே நலிவெனில் நெறிதவறும் நம்மவர் கதி என்னவாகுமோ?



மும்மூர்த்திகளில் படைத்தலுக்கு அதிபதியாகிய பிரம்மாவால் நவக்கிர நாயகர்களும் தண்டனைக்கு ஆளானார்கள்.

முன்னொரு காலத்தில் இமயமலைச்சாரலில் பலமுனிவர்கள் தவம் செய்து வந்தனர். அவர்கள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம் மாற்சரியம் என்ற ஆறுகுற்றங்களும் நீங்கியவர்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து களிறுகளைத் தம் போக்கில் போகாதபடி கடுத்து மடக்கித் தம்வசமாக்கிக் கொண்டவர்கள். மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களில் சித்தத்தால் மேம் பட்டவர்கள் தாமசம், ராஜசம், சாத்வீகம் என்ற முக்குணங்களில் சாத்வீக குணமுடையவர்கள். கண்களில் இரண்டு பார்வையும், மூக்கின் நுனியான ஓரிடத்திலே நிற்குமாறு தவப்புரியும் சீலமுடையவர்கள் அவர்கள் மும்மூர்த்திகளையும் வழிபட்டு நான்கு வேதம், ஆறு சாத்திரம், பதினெட்டு புராணம், இருபத்தெட்டு ஆகமம், அறுபத்து நான்கு கலைகள் தொண்ணூற்றாறு தத்துவம் முதலியவற்றை ஆராய்ந்து கொண்டிருக்கும் இயல் புடையவர்கள்.

### காலவ முனிவர்

இப்படிப்பட்ட முனிவர்கள் கூட்டத்தில் காலவ முனிவர்கள் என்ற ஒருவர் இருந்தார். அவர் முக்காலத்தையும் அறியும் மூதறிவு உடையவராகத் திகழ்ந்தார். இதனால் சில முனிவர்கள் இவரிடம் வந்து தங்களது வருங்காலம் பற்றி விசாரித்து அறிவது வழக்கம்.

### இளம் துறவி

ஒரு நாள் ஒரு இளம் துறவி காலவ முனிவரிடம் வந்தார். தனது வருங்காலம் பற்றி அறிவிக்கும்படி கேட்டார். காலவ

**ந. நவரட்ணம்**

(ஆனைக்கோட்டை)

முனிவர் தமது ஞான திருட்டியால் இளம் துறவியின் வருங்காலம் பற்றி ஆராய்ந்தார். உமது வருங்காலம் பற்றிக்கூற ஒன்றும் இல்லை என்றார். உடனே அந்த இளம் துறவி காலவ முனிவரைப்பார்த்து, ''முனிபுங்கவரே! மற்றவரின் வருங்காலம் பற்றிக்கூறும்நீர், உம்முடையவருங்காலம் பற்றி அறிந்ததுண்டோ'' எனக் கேட்டு நகைத்தார். உடனே காலவமுனிவர் இளம் துறவியைப்பார்த்து ''நீ யாரப்பா? இவ்வளவு துணிச்சலாக இதுவரை என்னிடம் யாரும் கேட்டதே இல்லை. நீ யாரப்பா என்றார்?'' என்னைத் தெரியவில்லையா? நான்தான் காலதேவன் என்று சொல்லி இளந்துறவியாக வந்தவர் மறைந்தார்.

### சோகம் படிந்தது

காலவ முனிவர் சிந்திக்கத் தொடங்கினார். தன்னுடைய வருங்காலத்தை எண்ணிப் பார்த்தார். தன்னுடைய முன்வினைப்பயனால், முன் ஜென்மத்தில் நண்டுகளின் காலை முறித்துத் தின்ற பாவத்தால், கூடியவிரைவில் தமக்குத் தொழுநோய் வரப் போகிறது என்பதை உணர்ந்தார். மிகவும் மனம் நொந்து, முகம்புலர்ந்து வாட்ட முற்றார்.

### முன்வினைப்பயன்

காலவமுனிவரின் சோகம் படிந்த முகத்தைப் பார்த்த மற்ற முனிவர்கள், சோகத்துக்குக் காரணம் என்னவென்று விசாரித்தார்கள். காலவமுனிவர் தமது வருங்கால நிலையை எடுத்துரைத்தார். அதனைக்கேட்ட மற்ற முனிவர்கள் 'காலவரே! முக்காலம் உணர்ந்தமுதறிஞரே! வருவன வந்தே தீரும் அதனைத் தீர்க்க வழி நாடாமல் வருந்தலாமா? முன்வினைப் பயனை ஊட்டுகிறவர்கள் நவக்கிரகங்கள். நவக்கிரகங்களை நோக்கித் தவம் செய்து வினைப்பயனிலிருந்து விடுதலைபெற முயற்சி செய்யும்' என்று ஆறுதல் கூறினர்.

### கடுந்தவம் புரிந்தார்

காலவ முனிவருக்கு இமய மலைச் சாரலில் இருக்க மனம் இருப்புக் கொள்ளவில்லை. அதனால் விந்திய மலைச் சாரலுக்கு வந்து ஓர் நல்ல நாள் பார்த்துப் பஞ்சாக்கினி வளர்த்தார் அதன் நடுவே நின்று நவக்கிரகங்களைத் தியானித்துக் கடும்தவம் புரிந்தார். தவம் முதிர முதிரத் தவத்தின் அக்கினி சுவாலை நவக்கிரக மண்டலத்தில் தாவியது. சுவாலையின் வெம்மையை நவக்கிரகங்கள் உணர்ந்தனர் நம்மை நோக்கி தவம் புரியும் காலவ முனிவரின் முன் நவக்கிரக நாயகர்கள் ஒரு சேர வந்து காட்சி கொடுத்தார்கள்.

### வரம் பெறல்

காலவ முனிவர் அக்கினியிலிருந்து வெளியே வந்து நவநாயகர்களின் முன்னே வீழ்ந்து எழுந்து நின்று கண்ணில் ஆனந்த நீர் வழியக் கைகளைத் தலைமேல் கூப்பி நின்று தோத்திரம் சொல்லித் துதித்தார். முனிவரின் பரவச நிலையைக் கண்டு மகிழ்ந்த நவக்கிரக நாயகர்கள் முனிவரே! உமது தவத்திற்கு மகிழ்ந்தோம். உமக்கு என்ன வரம் வேண்டும் என்றார்கள். காலவ முனிவர் நவநாயகர்களை நோக்கி 'நவ மண்டலாதிபர்களே' வினைப் பயனையூட்டும் தேவர்களே அடியேன் தொழுநோய் பற்றும் சூழ்நிலை உளளது. அந்த தொழுநோய் என்னை அணுகாதபடிவரம் தரவேண்டும என்று கேட்டுக்கொண்டார். நவநாயகர்களும் 'அவ்வண்ணமே ஆகுக' என்று வரம் கொடுத்து மறைந்தனர். இந்தச் செய்தி பிரமதேவருக்குத் தெரிய வந்தது. அதனால் பிரமதேவர் சினம் கொண்டு நவக்கிரகங்களைத் தம்மிடம் வருமாறு செய்தார். அவர்களை நோக்கி 'நவக்கிரகங்களே' நீங்கள் தேவர்களாக இருந்தாலும், எம் கட்டளைப்படி நடக்க வேண்டியவர்களாவீர்கள் தனித்து இயங்கும் சுதந்திரம் உங்களுக்கு இல்லை. சிவபெருமானின் ஆணைப்படி

→2-ம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகளே பிரித்தானிய அரசின் தடை வேதனைக்குரியது

**விநாயகமூர்த்தி எம். பி. கவலை**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை பிரித்தானிய அரசு தடை செய்துள்ளமை தொடர்பாக அரசியல் கட்சிகளின் பிரமுகர்களின் கருத்துகள் இங்கே தொகுத்து தரப்படுகின்றன.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசாங்கம் தடைசெய்துள்ளதாகஅறிவித்திருப்பது விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இடம் பெறவுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முட்டுக்கட்டையாக இருக்கலாம் என்றுஅகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்டபாராளுமன்ற உறுப்பினருமானஅ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேலும தெரிவிக்கையில் கூறியதாவது.

பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளைத் தடை செய்திருப்பது தமிழ்மக்களின்பிரச்சினையை மேலும் சிககலாககியுள்ளது.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளும் விடுதலைப்புலிகளைத் தடைசெய்திருந்தாலும் அத்தடைகள் விடுதலைப் புலிகளைப் பெரிதும் பாதிக்கவில்லை.

இத்தகைய நிலையிலும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள தானென்று 11 தமிழ்க் கட்சிகளும் எடுத்துக் கூறியபிறகும் பிரித்தானியா தடைசெய்திருப்பது வேதனைக்குரிய செயலாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

### தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.எஸ். சேனாதிராசா

பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமென நாம் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் பிரித்தானிய அரசு எமது காலை வாரிவிட்டது. தமிழ் மக்கள் இத் தடையைக் கண்டு துவண்டுவிடாது இலக்கை நோக்கிச் செயற்பட முன்வர வேண்டும்.

### ரெலோ முதல்வர் என். சிறிகாந்தா

பிரிட்டிஷ் அரசின் முடிவு தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பதாக இருந்தாலும் இதனால் ஒன்றும் குடிமுழுகிப் போகப் போவதில்லை.

இதனால் தமிழ் தேசிய இனத்தின் விடுதலை எழுச்சி எந்த விதத்திலும் மழுங்கடிக்கப்படாதுபார்த்துக்கொளள வேண்டும் என்றும் இதுதமிழ் மக்களின் கடமையாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஸ் அணி„ தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

இந்த விடயத்தில் நாம் அனைவரும் உறுதியாகஇருந்தால் தடைகள் எல்லாம பயனற்றுப் போகும் எனவும்சமாதான முயற்சி கனிந்துவரும் சூழ் நிலையில் இத்தடை ஒரு தடைக்கல்லாக அமையும்.

### இல. ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர் மனோரஞ்சன்

'தமிழ் மக்கள் அனைவரும் தங்களுக்கு இருக்கும் ஒரே ஒரு விமோசனம விடுதலைப் புலிகள் என்று நம்பிக் கொண்டிருந்தவேளையில்; பிரிட்டிஷ் அரசால் வெளியிடப்பட்ட பயங்கரவாத தடைப்பட்டியலில் விடுதலைப் புலிகளின் பெயர் வந்திருக்கிறது என்றால் அத் தடைக்குளளேயே விடுதலைப் போராட்டத்தின் பின்னடைவிற்குரிய பதில் அடங்கியிருக்கிறது.

## தவக்காலச் சிந்தனை-3



''உரத்தகுரலில்கத்திப் பேசுங்கள் கவி பாடுங்கள்'' ''நான் பாடி... நான் பாடி'' என்றுகத்தவேண்டாம்மீட்பர்வந்தார் என்னைமீட்டார் ...அனைவரும் வாருங்கள்மீட்புப்பெறுங்கள், ''நம்இறைவன்நல்லவர்'' என்றுகுரல் எழுப்புங்கள். நேரிய உள்ளம் கொண்ட சீடருக்கு இரக்க உள்ளமே மிகச் சிறந்த பலியாகும். அன்பில்லாத நோன்பும், உபவாசமும் எவ்வித பலனுமற்றவை. மகிழ்வுடன் பகிரும் மனப் பக்குவமும, அன்புமே ஆழமான நோன்பாகும். சமாதானம், நீதி, தாராள உள்ளம், பொதுநலம் இவையே நம்மை இறைவனுக்கு நெருக்கமாக இட்டுச் செல்லும் வழிகளாகும். இவற்றைக் கைக்கொள்வோம். இறைவனின் அன்பை வெல்வோம்.

காவலன்

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**
**74, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்.**
[கி-1540]

# க. பொ. த (சா/த) மாணவர்களுக்கு
# புலமைப் பரிசில் வழங்கும் திட்டம்

(கொழும்பு)

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் மிக அதிகமான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் மிக அதிகமான புள்ளிகளைப் பெற்று, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கணிசமான திறமை காட்டிய மாணவர்களுக்கே இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

ஒரு கல்வி வலயத்திற்கு அறுபது மாணவர்கள் என்ற ரீதியில் தெரிவு செய்யப்படும் இவர்களுக்கு ஜனாதிபதியின் விஷேட நிதியிலிருந்து இப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

வறுமைகாரணமாக உயர் கல்வியைத் தொடரமுடியாது பாடசாலையைவிட்டு வெளியேறும் நிலையைத்தடுப்பதற்காகவே இத்திட்டம் நடைமுறைப்படுகின்றது.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் அல்லது வேறுஏதாவது புலமைப் பரிசில் பெறாதவர்களுக்கே இப்புலமைப் பரிசில் வழங்கப் படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

அழகிற்கு அழகூட்டும்
தங்க நகைகளை
உடனுக்குடன் செய்து
தருபவர்கள்

**நியூ ராதிகாஸ் நகைமாளிகை**
**189. கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(கி/ 1543)

## கைப்பை திருட்டு

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளிலிருந்த கைப்பையொன்று களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம்நேற்றுக்காலை இடம் பெற்றது கோயிலுக்கு முன்னதாக சைக்கிளை நிறுத்தி விட்டு கோயிலுக்குச் சென்றபோதே இத் திருட்டு இடம் பெற்றது

யாழ்ப்பாண கட்டிடத் திணைக்களத்தில் கடமையற்றும் பெண்ணொருவரே கைப்பையை பறிகொடுத்தவராவார். (வ)

# பிரிட்டனின் புலிகள் மீதான தடைக்கு
# பொது ஆசிரியர் சங்கம் கண்டனம்

(திருமலை)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை பிரிட்டிஷ் அரசு தடை விதித்திருப்பதை வடக்கு கிழக்கு மாகாண பொது ஆசிரியர் சங்கம் கண்டித்து அறிக்கைஒன்றை விடுத்துள்ளது

அக்கண்டன அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

இலங்கையில் 1983ம் ஆண்டு இனப்பிரச்சினைவிஸ்வரூபம் எடுத்தபோது பிரித்தானிய அரசு தலையிட்டு, இனப்பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கவேண்டும். பிரித்தானிய அரசின் நடவடிக்கை காரணமாகத்தான் இலங்கையில் இனப் பிரச்சினை பூதாகரமாக வளர்ந்துள்ளது.

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளைத் தடைசெய்திருப்பதன் மூலம் இலங்கைத் தமிழர்களை பிரிட்டன் புறக்கணிப்பதாக அமைந்துள்ளது, எனவே விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் முடிவை பிரித்தானிய அரசு மறுபரிசீலனைசெய்ய வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சங்கத் தலைவர் ஆர். ஜெறோமும், செயலாளர் சி. சசிக்குமாரும் ஒப்பமிட்டுள்ளனர். [வ]

## புலிகள் மீதான---

வேண்டியதேவை பிரிட்டனில் குறித்தஅமைப்பு இயங்குவது மற்றும் பிரிட்டிஷ்மக்களுக்கு அச்சுறுத்தல் ஆகிய காரணங்களாலேயே பயங்கரவாத அமைப்புக்கள் தொடர்பான தடையை வெளியிட வேண்டியுள்ளது.

இதயசுத்தியுடன் இருதரப்பும பேசுமானால் இத்தடை தீர்மானம் இலங்கையின் சமாதான நடவடிக்கைக்கு ஒருசுமையாக அமையாதென வும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வே ஒரேவழியென்றும் பிரிட்டன் நம்புகிறதென அவ் அறிக்கையில்மேலும்தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ)

## குரு பூசை தினம்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை குடைச்சுவாமிகளின் குருபூசை நடைபெறும்.

இதனைத்தொடர்ந்து நண்பகல் மகேஸ்வரபூஜையும் இடம்பெறும். (ந)

## தொடர்பு கொள்க

கீழே பெயர் குறிப்பிடப் பட்டுள்ளவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிட்டிணப்பிள்ளை அம்பலவாணர் மாசேரி, வரணி

தம்பையா வைரமுத்து நாவற்குழி பாடசாலை யாழ்ப்பாணம்.

சோ. கோகிலரஞ்சிதம் நாகர் கோவில் தெற்கு.

ராசையா சிறீதரன் தம்புவத்தை ஏழாலை மேற்கு. (உ)

## அமைதிப்படை எரித்திரியாவுக்கு

ஐக்கியநாடுகள் சபையின் அமைதி காக்கும் படையிலுள்ள இந்தியப் படையினர், எதியோப்பிய, எரித்திரிய நாடுகளுக்கு இம்மாதம் செல்லவிருப்பதனை இந்திய இராணுவத்தின் துணைத் தலைவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## மட்டு....

அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளைத்தளர்த்தி பொது மக்கள்வழமைபோல்பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டு மென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா படைத் தரப்பிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததையடுத்தேஇவ் அனுமதி வழங்கப்பட வுள்ளது. [ந-4]

## விடுதலைப் . . .

மாகக் கூறிவருகிறது.

**அமெரிக்கா தடைவிதிக்க ஐ.தே கட்சியே காரணம்**

1992ல் விடுதலைப் புலிகள் அமைப்பை அமெரிக்கா தடை செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி யேமுழுக்காரணமாகஇருந்தது.

மேலும் 1987ல் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமே ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், ரெலோ போன்ற ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக மாற்றியது.

**தமிழ், முஸ்லிம் எம். பி க்கள் அதிர்ச்சி**

புலிகளை பிரிட்டன் தடை செய்தது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் வரவேற்பு அறிக்கை கட்சியிலுள்ள தமிழ், முஸ்லிம் எம்; பிக்களுக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் அளித்துள்ளதாக ஐ தே.கட்சியின் தமிழ்ப் பகுதி வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன;

இதேவேளை அஸ்கிரிய மல்வத்தபீட மாநாயக்கர்களும் ஜே.வி.பி,சிஹலஉறுமய போன்றசிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளும் விடுதலைப்புலிகள்அமைப்பை தடை செய்வதற்கு பிரித்தானியஅரசை ஐக்கியதேசிய கட்சி தூண்டவேண்டுமென்று கோரிக்கைவிடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்; (வ)

# புலிகள் முகாம்கள் மீது இயக்கச்சியில் தாக்குதல்

ஆனையிறவில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இயக்கச்சியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகள் முகாம்கள் மீது ஸ்ரீலங்கா வான் படைகள் நடாத்திய தாக்குதல்களில் அவை தரைமட்டமாக்கப்பட்டதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி முகாம்களில் நவீனரக ஆயுதங்கள் பெருமளவில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்ததாகவும், பெருந்தொகையான விடுதலைப் புலி உறுப்பினர்கள் நிலை கொண்டிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதுனர். (உ-7)

## அன்ரன்---

விடுதலைக்கூட்டணி பாராளுமன்று உறுப்பினர் பி.செல்வராஜா ஆகியோர்கருத்துதெரிவித்ததுடன் பிரித்தானியாவுக்கு அனுப்பிய மகஜரில் கையொப்பமுமிட்டுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது, இவர்கள் மீது அரசாங்கம் கடும நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

அத்துடன் பிரித்தானியாவில் இருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தற்பொழுது நோர்வேயில் அடைக்கலம் புகுந்துள்ளார். இவரை நோர்வே அரசு வரவேற்றுள்ளது, இந்த நடவடிக்கை நோர்வேயின் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிச்சமாக காட்டியுள்ளதென, திலக்கருணாரட்ண மேலும் தெரிவித்துள்ளார். (இ 5)

## அங்குரார்ப்பணம்

[யாழ்ப்பாணம்]

திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்படும் நாடக பயிலகம் 2001 ற்கான அங்குரார்ப்பண வைபவம் கடந்த புதன்கிழமை மாலை கலாமன்ற கலைத தூதுமணிமண்டபத்தில்நடை பெற்றது:

அன்றைய தினம் 'பசாம்' ஒலிப்பதிவு நாடாபாகம்7,8 வெளியீட்டு வைசவம் நடைபெற்றது. 'நாடகப்பயலயகம் 2001 இல் பங்கு பற்றியோருக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (உ-104)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விஞ்ஞானபீடம்**

**மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்**

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு — இரண்டாம் அரையாண்டு
விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு — இரண்டாம் அரையாண்டு
விஞ்ஞானத்தில் மூன்றாம் தேர்வு — இரண்டாம் அரையாண்டு
விஞ்ஞானத்தில் விசேட பட்டத் தேர்வு (மூன்றாம் ஆண்டு உயர்தர அலகுகள்)
விஞ்ஞானத்தில் விசேட பட்டத் தேர்வு

மேலே தரப்பட்டுள்ள பரீட்சைகள் **26-03 2 01**ஆம் திகதி ஆரம்பமாகி மேற்கண்ட வரிசையில் தொடர்ந்து நடைபெறும். இப் பரீட்சைகளுக்கு மீள் பரீட்சார்த்திகளாகத் தோற்றவிரும்புபவர்கள் பரீட்சை விண்ணப்ப படிவங்களை **22-03-2001**ஆம் திகதிக்கு முன்னதாக விஞ்ஞானபீட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பரீட்சைகள் எவ்வெப் பாடவிதான அலகுகளில் நடைபெறும் என்பன போன்ற விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் விஞ்ஞானபீட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.

[கி-1548]

நவீன வீடியோ
மிக்சிங் கமறா மூலம்
படப்பிடிப்புகள்
செய்யவும்
உள்புற ,வெளிப்புற
படப்பிடிப்புகளுக்கும்

**மேகாஸ் வீடியோ ஓடியோ அன் மிக்சிங் ஸ்ரூடியோ**

23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1541)



**கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத விநாயகர் ஆலயத்தில்**

மகாசாமதி கோயில் கொண்டருளிய குடைச் சுவாமிகளின் 22வது குருபூசை தினம் 02. 03. 2001 இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் இன்றையதினம் நண்பகல் அடியார்களுக்கு மகேஸ்வர பூசையும் இடம் பெறும்.

கோண்டாவில் கிழக்கு,
வர்த்தகர்கள்.

விளம்பர அன்பளிப்பு:

**தபேஷன்**
விவசாய மாளிகை
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.

(கி-1549)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.